மொத்தமாகத்தான் இதற்கும் பணம் ஒதுக்கப்பட்டது. எனவே தனித் தனியாக பள்ளிகள் சீரமைப்புக்கு எவ்வளவு செலவானது என்பது போன்ற **கணக்கு** விவரம் என்னிடம் **இல்லை.**

Retired Officers of Commercial Taxes Department.

@ * 96. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whetrer it is a fact that several retired Officers of the Commercial Taxes Department, are appearing for assessees before Assessing Officers and Appellate Authorities of the Commercial Taxes Department, by filing powers of attorney ;

(*b*) whether such Officers are allowed to collect fees for such appearance besides their pensions; and

(*c*) whether there is any proposal for stopping their pensions or for issuing appropriate orders to prevent them from such appearance ?

மாண்புமிகு திரு. எஸ். டி. **சோமசுந்தரம் :** (அ) ஓய்வு பெற்ற வணிக வரித்துறை அலுவலர்கள், அதிகாரமளிக்கும் சான்றிதழ் தந்து வரி விதிப்பு அலுவலர்கள் முன்பும் மேல்முறையீட்டு அலுவலர்கள் முன்பும் வணிகரின் சார்பாக வழக்குரைக்கின்றார்கள். இதற்குத் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டமும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இடமளிக்கின்றன.

(இ) ஆம்.

(உ) அவர்கள் அப்படி விற்பனை வரி வழக்குரைஞராகத் தொழில் புரிவது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கும் அதன்கீழ் பிறப்பித்த விதிகளின் வரம்பிற்கும் உட்பட்டதனால் அவர்களுடைய ஓய்வு கால ஊதியத்தை நிறுத்துவதற்கோ அவர்களை அங்ஙனம் தொழில் புரியாது தடுப்பதற்கோ நடவடிக்கை தேவையில்லை.

திரு. த. சந்தோஷம் : ஓய்வு பெற்ற அதிகாரிகள் இவ்வாறு வரி விதிப்பு அதிகாரிகள் முன்பு வியாபாரிகளுக்காக ஆஜராகி வாதாடும்போது, வரி விதிப்பை நிர்ணயிக்கும் அதிகாரிகள் ஒன்று இவர்களின்கீழ் பணியாற்றிய வர்களாகவோ அல்லது அவர்களோடு இணைந்து பணியாற்றியவர்களாகவோ இருப்பதன் காரணமாக பல தவறுகள் நடைபெறுவதற்கான சூழ்நிலைகள் உருவாகின்றன. அது மட்டுமல்ல. ஓய்வு பெற்ற அதிகாரிகள் வேறு பணி

@ 28—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

யில்—அரசாங்கப் பணியில் ஈடுபட்டுச் சம்பளம் வாங்கினால்—அதை அவர்களின் பென்ஷனிலிருந்து கழிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆனால். இவர்களோ அத்தகைய விதிகளை மீறுகிறார்கள் என்பதால் இதையெல்லாம் கருத்தில் கொண்டு சட்டத்திற்குரிய திருத்தத்தை அரசு கொண்டு வருவதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 50 (2) விதிப்படி, ஓய்வு பெற்ற வணிக வரித் துறை அலுவலர்கள் தாங்கள் ஓய்வு பெற்று 2 ஆண்டுகளான பிறகு இவ்வாறு வழக்குரைஞர்களாகத் தகுதியுடையவர்களாக உள்ளார்கள். ஆனால் விற்பனை வரிச் சட்ட மேல்முறையீட்டின் தீர்ப்புப்படி வருவாய் வாரியத்தின் முன்பும், மேலதிகாரிகள் முன்பும் அவர்கள் சென்று பேசுவதற்கான உரிமை இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும், துறை அதிகாரிகளிடம் சலுகை பெற வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. த. சந்தோஷம்: நீதித் துறையைப் பொறுத்தவரையில், ஹைக்கோர்ட்டில் பணியாற்றிய நீதிபதிகள் அவர்களின் ஓய்வுக்குப் பிறகு அதே ஹைக்கோர்ட்டில் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொண்டு பணியாற்றக் கூடாது என்று தடை இருக்கிறது. அதைப்போலவே பார் கவுன்சில் ஆக்டிலும், அட்வகேட்ஸ் ஆக்டிலும் இப்படி ஓய்வு பெற்ற மற்ற நீதிபதிகள் தாங்கள் பணியாற்றிய இடங்களில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றக்கூடாது என்று விதி இருக்கிறது. அப்படிப்பட்ட தடையை இந்தத் துறையிலும் கொண்டு வருவது நல்லதாக இருக்கும். எனவே இந்த அடிப்படையில் இப்பிரச்சினையை அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நீதித் துறையில் தடை இருப்பதால், அங்கே அவ்வாறு பணி புரியவில்லை. இங்கே அப்படி தடையேதும் இல்லாததால், பணி புரிகிறார்கள் என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். இதை அரசு பரிசீலிக்கும் என்றும் சொன்னேன்.